# கொழும்பு மாநகர சபை
# மாநகர பொறியியலாளர்கள் திணைக்களம்
# கேள்வி கோரல்

பின்வரும் வேலைக்கு இரட்டைப்பிரதிகளில் என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | சேவையின் பெயர் | விண்ணப்பதாரரின் தகைமை | VAT & NBT உட்பட மீளப்பெற முடியாத பத்திரக் கட்டணம் ரூபா சதம் | கேள்விப்பிணையின் பெறுமதி ரூபா சதம் | விபரங்களுக்கு தொடர்பு உத்தியோகத்தர் |
|---|---|---|---|---|---|
| 01) | கொழும்பில் குறிப்பிட்ட சில இடங்களில் வீதியோர வாகனத் தரிப்பிட கட்டண சேகரிப்பையும் முகாமைப்படுத்தலையும் குத்தகைக்கு வழங்கல் - XII ஆம் கட்டம் | வணிகப்பதிவு சான்றிதழுடன் இந்த வகையான வேலையில் போதிய அளவு அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்கள் | 2,340.00 | கேள்வி விலையில் 2% (வரிகள் நீங்கலாக) கோரிக்கையின் பேரில் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம் | பணிப்பாளர் பொறியியல் (TDRS) தொலைபேசி: 011 - 2694593 |

**குறிப்பு: கேள்விகளுக்கான விரிவான அழைப்பு கேள்விப்பத்திரங்களுடன் வழங்கப்படும்.**

**கேள்வி மூடப்படும் நேரம் :** 29.03.2018 காலை 10.00 மணி. கேள்விகள் மூடப்பட்ட பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**கேள்விப்பத்திரங்கள் விநியோகம் :** 28.03.2018 காலை 10.00 மணி வரை கொழும்பு - 07 நகர மண்டபத்திலுள்ள மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் திட்ட முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**கோரிக்கையின் செல்லுபடிக்காலம் :** கோரிக்கை 24.09.2018 வரை செல்லுபடியானதாக இருக்கவேண்டும்.

**கேள்விப்பிணையின் செல்லுபடிக்காலம் :** கேள்விப்பிணை 24.10.2018 வரை செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.

**கேள்விப்பெட்டி வைக்கப்படும் இடம் :** மாநகர செயலாளர் திணைக்களம், நகர மண்டபம், கொழும்பு- 07 தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**ஏனைய நிபந்தனைகள் :** (அ) இதற்கென வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) கேள்விப்பத்திர கட்டணத்தை பணமாக செலுத்தியதற்கான ரசீதுடன் அலுவலக கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட கோரிக்கை கடிதம் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

(இ) மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் திட்ட முகாமைத்துவப் பிரிவில் கட்டணம் செலுத்தாமல் கேள்விப்பத்திரங்களை பார்வையிட முடியும்.

(ஈ) கேள்விகள் மூடப்படும் நேரம் முடிந்தவுடன் அவை திறக்கப்படும். இந்தத்தினம் அரசாங்க விடுமுறை தினமாக பிரகடனம் செய்யப்பட்டால் இதற்கு அடுத்துவரும் வேலைநாளில் காலை 10.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாக திறக்கப்படும்.

(உ) கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

திரு. V.K.A. அநுர,
மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகரசபை, நகர மண்டபம், கொழும்பு - 07.

veeraKesari